**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ம் நாள் புதன்கிழமை**

**E.A.No. 03/2026 in E.P.No. 10/2024 in O.S.No. 175/2015**

1. பிச்சை (இறப்பு)
2. பழனியம்மாள் (இறப்பு)
3. மணிமேகலை
4. ராக்கேஷ்சர்மா
5. யோகப்பிரியா ... மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிராக//**

1. கந்தசாமி (இறப்பு)
2. ரெங்கசாமி (இறப்பு)
3. பழனியப்பன் (இறப்பு)
4. சுப்பிரமணி (இறப்பு)
5. காமராஜ்
6. ஆனையப்பன்
7. பாலகிருஷ்ணன்
8. வடிவேல்
9. தங்கவேல்
10. புவனா
11. சந்திரசேகர்
12. சசிகலா
13. சங்கரி
14. லட்சுமி
15. சரவணன் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 05.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.RM.சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

நிறைவேற்று மனுவில் கண்ட சொத்துக்களை குளித்தலை வட்டம் புத்தூர் கிராமம் சர்வேயர் உதவியுடன் சுவாதீனம் எடுக்க அனுமதி கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் நிறைவேற்று மனுவில் 3ம் மனுதாரர். இவர் மற்ற மனுதாரர்களுக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். நிறைவேற்று மனுவில் சுவாதீனம் கொடுக்க உத்தரவு ஏற்பட்டு படி கட்டியதை எதிர்மனுதாரர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு கலகம் செய்யும் நோக்கத்தோடு சுவாதீனம் எடுக்க விடாமல் தடை செய்ய முயற்சித்தனர். எனவே சமூகம் நீதிமன்ற அமீனாவால் சுவாதீனம் எடுக்க இயலாமல் தனது வாரண்டை திரும்ப வைத்தார். மேலும் அவர் தனக்கு காவல்துறை உதவி, நில அளவையர் உதவி மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவி வேண்டுமென கோரி இருந்தார். எனவே நில அளவையர் மூலமாக நீதிமன்ற அமீனா சுவாதீனம் எடுக்க உதவிடுமாறு அனுமதி கேட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**7ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்**

2) மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் பொய்யானது. மனுதாரர்கள் இதற்கு முன்பே மனு சொத்தை அளவீடு செய்ய சென்ற போது அதில் அதிகப்படியான முட்கள் முளைத்து இருந்ததால் அதை அளவீடு செய்ய இயலவில்லை. எனவே மனு சொத்தை அளவீடு செய்யாமலேயே அலுவலகத்தில் இருந்து கொண்டே நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். இதை நிரூபிக்க நில அளவையர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து மேற்படி சங்கதியை நிரூபிக்க எதிர்மனுதாரர்கள் தயாராக உள்ளனர். ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து மனு சொத்தை பார்வையிட்டால் மேற்படி உண்மை தெரிய வரும்.

3) மனுச் சொத்தை தற்போது வரை நில அளவையரால் முறையாக அளவீடு செய்யப்படவில்லை. தற்போதும் மனுச் சொத்தில் பெரிய அளவில் மரங்களும், புதர்களும் நிறைந்து இருப்பதால் அதை அளவீடு செய்ய இயலாது. எதிர்மனுதாரர்கள் சுவாதீனம் கொடுக்க தடையாக இருந்ததாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானதாகும். அவர்கள் வேண்டுமென்றே

காவல்துறை, நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவி கோரி கற்பனையான சங்கதிகளுடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

5) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்கள் மனுச்சொத்தை சுவாதீனம் எடுக்க விடாமல் தடுக்க முயற்சி செய்ததாகவும் எனவே சுவாதீனம் எடுக்க செல்லும் போது காவல்துறை உதவியுடன் நில அளவையரை வைத்து மனுச் சொத்தை அளவீடு செய்து சுவாதீனம் எடுக்க வேண்டுமென மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை செய்தனர்.

6) இவ்வழக்கை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கானது 20.01.2023 ல் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அதை எதிர்த்து தாக்கல் செய்த மேல்முறையீட்டு எண்.33/2003 மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவில் மனுச் சொத்தை 4 சம பாகங்களாக பிரித்து ஒரு பாகத்தை மனுதாரர்களுக்க ஒப்படைப்பு செய்ய உத்தரவு போடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இறுதிநிலை தீர்ப்பாணையில் மனுதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்துக்களை சுவாதீனம் கோரி இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இறுதிநிலை தீர்ப்பாணையில் கண்டுள்ளபடி எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு சுவாதீனம் கொடுக்காததால் நீதிமன்றத்தின் மூலமாக சுவாதீனம் கேட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் எதிர்மனுதாரர்கள் சுவாதீனம் எடுக்க தடையாக இருப்பதால் காவல்துறை, நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவி கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதாகவே உள்ளது. மேற்படி நபர்களின் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் சென்றால் மட்டுமே சுவாதீனம் எடுக்க இயலும் என தனது வாரண்டை திருப்பி வைத்துள்ளார். அதன் அடிப்படையில் நீதிமன்ற அமீனாவிற்கு

காவல்துறை உதவியும், நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியும் தேவை என அறிய முடிகிறது. எனவே அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**E.A.No. 03/2026**
**in**
**E.P.No. 10/2024**
**in**
**O.S.No. 175/2015**

**DRAFT / FAIR ORDER**

**D.D.11.03.2026**
**********************************